**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை :- **திரு.என். அழகேசன், B.Sc., L.L.M.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 - ஆம் நாள் திங்கட்கிழமை

TNTV06-000007-2019

**அசல் வழக்கு எண்.19/2019**

ஜெகநாதன் .... வாதி

**// எதிர் //**

புஷ்பநாதன் .... பிரதிவாதி

இவ்வழக்கு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.விஜயன், B.A., B.L., அவர்களும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.உதயகுமார், B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

**தீர்ப்புரை**

வாதியின் தகப்பனார் கடந்த 05.07.2000 ம் தேதியில் கிரயம் பெற்ற சொத்து சர்வே எண்.201/D5 என்று தவறுதலாக உள்ளதை சர்வே எண். 201/1D5 என்று விளம்புகை செய்தும், அதனை தொடர்ந்து பிரதிவாதிகள் தாவா சொத்தை பொறுத்து எவ்வித வில்லங்கமும் ஏற்படுத்தக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், பிரதிவாதி தாவா சொத்தினை காலி சுவாதீனம் செய்து வாதி வசம் ஒப்படைக்க உத்தரவு வழங்க கோரியும், தாவா செலவுத்தொகை மற்றும் இதர பரிகாரங்கள் வேண்டி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம் :-**

**2.1.** கடந்த 05.07.2000 ம் தேதியில் ஏற்படுத்திய ஆவணத்தில் உள்ள சர்வே எண்.201/D5 என்று எழுதியிருப்பது 201/D5 அல்ல 201/1D5 என்று விளம்புகை செய்தும், அதனை தொடர்ந்து எவ்வித வில்லங்கமும் ஏற்படுத்தக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் தாவா சொத்தை பிரதிவாதியிடமிருந்து வசப்பரிகாரம் கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.2.** தாவா சொத்தை வாதியின் தக்கப்பனார் கடந்த 05.07.2000 ம் ஆண்டு கிரயம் பெறப்பட்டு அது முதல் வாதியின் தகப்பனாரின் தனிப்பட்ட அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வந்துள்ளது. வாதியின் தகப்பனார் இறந்த பிறகு வாதி மற்றும் அவரது சகோதர சகோதரிகளின் கூட்டனுபவத்தில் இருந்து வருகிறது. கடந்த 2015 ம் ஆண்டு வாதி குடும்ப விஷயமாக வெளியூர் சென்றிருந்ததை அனுகூலமாக எடுத்துக்கொண்ட பிரதிவாதி வாதியின் சொத்தை ஆக்கிரமித்து கூரை கொட்டகை அமைத்து அனுபவித்து வருகிறார். வாதியானவர் ஊர்க்காரர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் மூலம் பேசியபோது தாவா சொத்தை பிரதிவாதி வாதி வசம் ஒப்படைப்பது விடுவதாக தெரிவித்துவிட்டு தாவா சொத்தினை ஒப்படைக்காமல் வீண் சால்சாப்புகள் சொல்லி தவிர்த்து வருகிறார். பிரதிவாதியின் செயல் சட்டப்படி தவறானது. மேலும், அதுபோன்று செயல்பட பிரதிவாதி சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளார். மேற்படி விபரங்களை குறித்து வாதி பிரதிவாதிக்கு கடந்த 10.12.2018 ம் தேதியில் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பியுள்ளார். அதனை கடந்த 13.12.2018 ம் தேதியில் பெற்றுக்கொண்ட பிரதிவாதி முன்னுக்குப்பின் முரணான சங்கதிகளை தெரிவித்து பதிலறிவிப்பு அனுப்பியுள்ளார்.

**2.3.** பிரதிவாதி கொடுத்துள்ள பதிலறிவிப்பில் சர்வே எண். 201/1D5 என்றும் 201/D5 என்று பதிவு செய்யவில்லை என்று தெரிவித்திருந்த பிறகு தான் வாதிக்கு மேற்படி பத்திரத்தில் பதிவு செய்தபோது ஏற்பட்ட தவறு தெரிய வந்துள்ளது. அதன் பிறகு அதனை சரிசெய்து விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் வாதிக்கு உரிமையுள்ள சொத்திற்குள் அத்துமீறி ஆக்கிரமித்து கொட்டகை அமைத்துள்ள பிரதிவாதி அதனை காலி சுவாதீனம் செய்து வாதி வசம் ஒப்படைக்கும் எண்ணம் சிறிதும் இல்லாமல் தொடர்ந்து வாதிக்கு கஷ்ட நஷ்டத்தை ஏற்படுத்தும் வண்ணம் செயல்பட்டு வருவதால் வாதியின் சொத்திற்குள் பிரதிவாதி ஆக்கிரமித்து அமைத்துள்ள கூரைக் கொட்டகையை அகற்றிக் கொண்டு காலி சுவாதீனம் செய்து ஒப்படைக்க வேண்டியது அவசியமானது.

**2.4.** மேற்படி வாதி சர்வே எண் தவறுதலாக ஏற்பட்டுள்ளது என்று தெரிய வந்த நாளிலிருந்து 3 வருட காலத்திற்குள் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள காரணத்தினால் வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்படவில்லை. ஆகவே வாதியின் தந்தை கடந்த 05.07.2000 ம் தேதியில் கிரயம் பெற்ற சர்வே எண். 201/1D5 என விளம்புகை செய்தும் அதனை தொடர்ந்து பிரதிவாதி தாவா சொத்தை பொறுத்து எவ்வித ஆவணமும் ஏற்படுத்தக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் வசப்பரிகாரம் கோரி வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) <u>பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த எதிர் வழக்குரையின் சுருக்கம்</u> :-**

**3.1.** வாதியின் வழக்கு சரியல்ல. சட்டப்படி நிலைநிற்க தக்கதல்ல. முதல் எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாக இருக்கிறது. வழக்கு விவரங்களை பிரதிவாதி வன்மையாக மறுக்கிறார். வாதியே வழக்கை நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார்.

**3.2.** வாதியின் வழக்கு தவறான புல எண்ணையும், தவறான சொத்து விவரத்தையும் கண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி வழக்குரையில் சொத்து சுவாதீனத்திற்காக வழக்கு தாக்கல் செய்துவிட்டு பிரார்த்தனை காலத்தில் தான் கிரயம் பெற்ற சொத்து சர்வே எண். 201/D5 என்பது தவறுதலாக உள்ளதாகவும், 201/1D5 என விளம்புகை செய்ய கேட்டிருப்பது நிலைநிற்கதக்கதல்ல.

**3.3.** வழக்கில் வாதி கிரயம் பெற்ற ஸ்தலம் சர்வே எண் தவறானது என விளம்புகை செய்ய கோரி முதலில் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும். அதற்கு பிறகு தான் சொத்து சுவாதீனம் கேட்கப்பட வேண்டும். ஆனால் வாதி விளம்புகைக்காக வழக்கு தாக்கல் செய்யாமல் சுவாதீனத்திற்காக வழக்கு தாக்கல் செய்திருப்பது நிலைநிற்கதக்கதல்ல. வாதி தாக்கல் செய்துள்ள 1 வது ஆவணமாகிய 05.07.2000 ம் தேதியிட்ட கிரய சாசனப்படி அவருக்கு சொத்து சுவாதீனம் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல. கிரய பத்திரம் தவறானது. அவர் ஏதோ ஒரு சொத்தை கிரயம் வாங்கிவிட்டு கிரயம் வாங்காத வேறு சொத்தை அபகரிக்க முயற்சி செய்துள்ளார்.

**3.4.** வாதி வழக்குரையில் வழக்கிற்கு முன் 10.12.2018 ம் தேதியில் அறிவிப்பு அனுப்பியுள்ளார். மேற்படி அறிவிப்பில் சர்வே எண். 201/D5 ல் 0.25 செண்டில் 0.17 செண்டை பிரதிவாதி ஆக்கிரமித்திருப்பதாக குறிப்பிட்டுள்ளார். அதை மறுத்து பிரதிவாதி 27.12.2018 ம் தேதியில் பதில் அளித்துள்ளார். மேற்படி பதிலறிவிப்பில் " என் கட்சிக்காரர் வீடு கட்டி வசித்து வருவது புல எண். 201/D5 அல்ல, அவர் வசிப்பது 201/1D5 ஆகும். இதற்கும் வழக்கு சொத்திற்கும் எந்தவித சம்மந்தமும் கிடையாது என குறிப்பிட்டிருந்தார்". 201/1D5 என்பது 12.05.1974 ம் தேதியிட்டதும் பிரதிவாதியின் தகப்பனார் முந்தைய உரிமையாளரான காளிமுத்து அம்பலக்காரரிடமிருந்து சர்வே எண். 201/1D5-ல் 0.44

செண்டை கிரயம் பெற்றுள்ளார். மேற்படி கிரயம் பெற்ற சொத்தை பிரதிவாதியின் தகப்பனார் வாதியின் தகப்பனாருக்கு எந்த சமயத்திலும் 201/1D5 ஐ கிரயம் செய்து கொடுக்கவில்லை. மேற்படி கிரயம் செய்து கொடுத்த சொத்து வேறு ஆகும். வாதியின் குடும்பத்தினர் 05.07.2000 ம் தேதியில் கிரயம் பெற்ற சொத்திற்கு அறிவிப்பு கொடுத்துவிட்டு பிரதிவாதி வசம் இருக்கும் புல எண். 201/1D5 சொத்தை ஆக்கிரமிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

**3.5.** வாதி உண்மையிலேயே பிரதிவாதியின் பதில் அறிவிப்புக்கு பிறகு புதிய கட்சியை எடுத்து வழக்கிட்டுள்ளார். வாதியின் வழக்கு வேறு பிரதிவாதியின் சொத்து வேறு ஆகும். பிரதிவாதி கொடுத்த பதிலறிவிப்புக்கு பிறகு வாதி அவரது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு புதிய வழக்கை நிறுவ முயற்சி செய்துள்ளார். பிரதிவாதியின் தகப்பனார் காளிமுத்து அம்பலக்காரரிடம் 09.08.1959 ம் தேதியில் கிரயம் பெற்ற சொத்து சர்வே எண்.201/1 ல் 0.58 செண்ட் ஆகும். மேற்படி சொத்தை தான் பிரதிவாதியின் தகப்பனாருக்கு 1974 ம் ஆண்டில் கிரயம் செய்து கொடுத்துள்ளார். மேற்படி சொத்து தான் தற்போது பிரதிவாதி வசம் புல எண். 201/1D5 என இருந்து வருகிறது. வாதி தவறான கிரயப்பத்திரத்தின் அடிப்படையில் கிரயம் செய்துவிட்டு 19 ஆண்டுகள் காத்து வழக்கு தாக்கல் செய்திருப்பது நிலைநிற்கதக்கதல்ல.

**3.6.** வாதி கிரய பத்திரத்தின்படி 05.07.2000 ம் தேதியிலிருந்து அவர் 12 ஆண்டுகளுக்குள் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும். அவ்வாறு தாக்கல் செய்யப்படாததால் அவர் கோரியுள்ள பரிகாரம் அனைத்தும் முற்றிலும் காலாவதியாகிவிட்டது. எனவே வாதியின் வழக்கு நிலைநிற்கதக்கதல்ல. எனவே வாதி

தாக்கல் செய்துள்ள இந்த வழக்கை பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று பிரதிவாதி எதிர்வழக்குரையை தாக்கல் செய்துள்ளார்.

**4)** இவ்வழக்கில் தீர்வு காணும் பொருட்டு, வழக்குரை, எதிர்வழக்குரை ஆகியவற்றை இந்நீதிமன்றம் நன்கு பரிசீலித்து கீழ்கண்ட வழக்கெழுவினாக்கள் வனையப்பட்டன.

**வழக்கெழுவினாக்கள் ;-**

1. வாதி வழக்குரையில் கோரியுள்ள விளம்புகை பரிகாரமும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?
2. தாவா சொத்தைப் பொறுத்து வாதி வழக்குரையில் கோரியுள்ள சுவாதீன பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?
3. வாதிக்கு கிடைக்கக் கூடிய இதர பரிகாரம் என்ன?

**5) இருதரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிய சான்றாவணங்கள் :-**

வாதி தரப்பில் வாதி ஜெகநாதன் வா.சா.1 ஆகவும், வடிவேல் என்பவர் வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு வா.சா.1ன் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் பிரதிவாதி புஷ்பநாதன் பி.சா.1 ஆகவும், சுந்தர்ராஜன் என்பவர் பி.சா.2 ஆகவும், அருணகிரி என்பவர் பி.சா.3 ஆகவும் விசாரிக்கப்பட்டு பி.சா.1ன் மூலம் பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**6) வாதி தரப்பு வாதுரையின் சுருக்கம் :-**

வாதியின் தந்தை பிரதிவாதியிடமிருந்து தாவா சொத்தை கிரயம் வாங்கினார் என்றும், மேற்படி கிரயம் பெற்ற சொத்து வாதியானவர் 17 செண்ட் நிலத்தை ஆக்கிரமித்துள்ளார் என்பதையும், தாவா சொத்தின் சர்வே எண் தவறாக உள்ளது என்பதையும் வாதியானவர் தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம்

நிரூபித்துள்ளதால் வாதி கோருகின்ற விளம்புகை பரிகாரமும் அதன் தொடர் பரிகாரமான தாவா சொத்தை குறித்து வில்லங்கம் ஏற்படுத்தக்கூடாது என உறுத்துக்கட்டளை பரிகாரமும் பிரதிவாதியின் ஆக்கிரமிப்பில் உள்ள சொத்தை வாதியிடம் ஒப்படைக்க வசப்பரிகாரமும் வாதிக்கு கிடைக்கத்தக்கது என வாதியின் கற்றறிந்த வழக்கறிஞர் வாதம் செய்தார்.

7) <u>பிரதிவாதி தரப்பு வாதுரையின் சுருக்கம்</u> :-

வாதியானவர் கிரயம் பெற்ற சொத்தானது வல்லூர் கிராம சர்வே எண்.201/D5 சொத்து என்றும், ஆனால் இந்த வழக்கானது வாதி கிரயம் பெற்ற சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்யாமல் பிரதிவாதிக்கு சொந்தமான சர்வே எண்.201/1D5 சொத்து குறித்து விளம்புகை பரிகாரமும், வசப்பரிகாரமும் கோரி தாக்கல் செய்துள்ளதால் வாதி கோருகின்ற பரிகாரங்கள் கிடைக்கதக்கதல்ல என்பதால் பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமென பிரதிவாதியின் கற்றறிந்த வழக்கறிஞர் வாதம் செய்தார்.

8) <u>தீர்வு</u> :-

<u>எழுவினா -1 க்கான தீர்வு</u> :-

i) தாவா சொத்தானது வல்லூர் கிராம சர்வே எண்.201/D5 என்பது தவறானது, சர்வே எண்.201/1D5 என்பதுதான் சரி என்பதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பானது பிரிவு 101 இந்திய சாட்சிய சட்டத்தின்கீழ் வாதியை சார்ந்தது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

ii) தாவா சொத்தானது நாகப்பட்டிணம் பதிவு மாவட்டம், மன்னார்குடி சார்பதிவகம், மன்னார்குடி தாலுக்கா, வல்லூர் கிராமத்தில் சர்வே நம்பர் 201/D5 ல் 0.25 செண்டு புஞ்சை

தாவா சொத்தானது உள்ளது என வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லப்பட்டுள்ளது.

iii) வாதி தரப்பு வழக்கை நிரூபணம் செய்யும் விதமாக வாதி ஜெகநாதன் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக கடந்த 05.07.2000 ம் தேதியிட்ட கிரய சாசனம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆகவும், கடந்த 10.12.2018 ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அஞ்சலக ரசீது வா.சா.ஆ.2 ஆகவும், கடந்த 13.02.2018 ம் தேதியிட்ட பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.3 ஆகவும், கடந்த 27.12.2018 ம் தேதியிட்ட பிரதிவாதி கொடுத்த பதிலறிவிப்பு அசல் வா.சா.ஆ.4 ஆகவும், தாவா சொத்திற்கான வில்லங்க சான்றிதழ் வா.சா.ஆ.5 ஆகவும், கடந்த 30.07.2016 ம் தேதிய பட்டா மாறுதல் உத்தரவு சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6 ஆகவும், தாவா சொத்திற்குண்டான சிட்டா கணினி நகல் வா.சா.ஆ.7 ஆகவும், தாவா சொத்திற்குண்டான அ-பதிவேடு கணினி நகல் வா.சா.ஆ.8 ஆகவும், தாவா சொத்திற்குண்டான புல வரைபடம் கணினி நகல் வா.சா.ஆ.9 ஆகவும், வாதியின் தகப்பனாரின் இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.10 ஆகவும், வாதியின் தகப்பனாரின் வாரிசு சான்று சான்றிட்ட நகல் வா.சா.ஆ.11 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

iv) பிரதிவாதி தரப்பு வழக்கை நிரூபணம் செய்யும் விதமாக பிரதிவாதி புஷ்பநாதன் பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக கடந்த 12.05.1974 ம் தேதிய தாவா சொத்தை பிரதிவாதி அப்பா கிரயம் வாங்கியதற்குண்டான கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.1 ஆகவும், தாவா சொத்திற்குண்டான வில்லங்க சான்றிதழ் அசல் பி.சா.ஆ.2 ஆகவும், கடந்த 10.12.2018 ம் தேதி வாதி பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அசல் பி.சா.ஆ.3 ஆகவும், கடந்த 27.12.2018 ம் தேதி பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு

பி.சா.ஆ.4 ஆகவும், வாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்குண்டான அஞ்சலக ஒப்புதல் அட்டை பி.சா.ஆ.5 ஆகவும், தாவா சொத்திற்குண்டான வீட்டு வரி ரசீதுகள் (எண்ணிக்கை - 14) பி.சா.ஆ.6 ஆகவும், கடந்த 20.09.2005 முதல் 31.01.2023 ம் தேதி வரை தாவா சொத்திற்குண்டான மின் கட்டண ரசீது பி.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

v) வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், வாதியின் தந்தை பொதியப்பன் பிரதிவாதியிடமிருந்து ரூ.12,500/-க்கு சர்வே எண்.201/D5 விஸ்தீரணம் 0.25 செண்ட் புஞ்சை நிலத்தை 05.07.2000 ம் தேதியன்று கிரயம் வாங்கினார் என்பதும் மேற்கண்ட கிரய ஆவணமானது மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.1059 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. மேற்கண்ட வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி சர்வே எண்.201/D5 விஸ்தீரணம் 0.25 செண்ட் புஞ்சை நிலத்தை பிரதிவாதியானவர் வாதியின் தந்தைக்கு விற்பனை செய்தார் என்பதை பிரதிவாதியானவர் மறுக்கவில்லை.

vi) மேற்கண்ட வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சொத்தானது தாவா சொத்தாகும். மேற்கண்ட சொத்து தற்போது சர்வே எண்.201/1D5 ஆக உள்ளது என வாதி தரப்பில் வாதம் செய்யப்பட்டது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சர்வே எண்.201/D5 ஆனது 201/1D5 ஆக உள்ளதுதான் உண்மையானது என்பதால் வாதியானவர் 201/D5 என்பதை 201/1D5 என விளம்புகை செய்ய வேண்டும் என இந்த வழக்கு தாக்கல் செய்து கட்சி செய்து வருகிறார்.

vii) மாறாக, பிரதிவாதி தரப்பில் வா.சா.ஆ.1 ஆவணத்தை மறுக்கவில்லை. மேற்கண்ட வா.சா.ஆ-1 ஆவணம் குறித்த பதிவானது வில்லங்க சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ளது வா.சா.ஆ-5 ன் மூலம் தெரிய வருகிறது. மேற்கண்ட வில்லங்க சான்று பிரதிவாதி தரப்பில்

பி.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், சர்வே எண்.201/1D5 என்பது வாதியின் தந்தைக்கு விற்பனை செய்த சொத்திற்கும் தொடர்பில்லாத சொத்து என பிரதிவாதி தரப்பில் கட்சி செய்யப்பட்டது. அதனை உறுதி செய்யும் விதத்தில் பிரதிவாதி தரப்பில் பி.சா.ஆ.1 ஆவணத்தை தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளார். பி.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், 12.05.1974 ம் தேதியன்று காளிமுத்து அம்பலக்காரரிடமிருந்து பிரதிவாதியின் தந்தை பாலசுப்பிரமணியம் என்பவர் சர்வே எண்.201/1D புஞ்சை 44 செண்ட் நிலத்தை கிரயம் வாங்கினார் என்பதற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளார். மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையில், பிரதிவாதி கட்சி செய்வதுபோல் சர்வே எண்.201/1D விஸ்தீரணம் 44 செண்டை பிரதிவாதியின் தந்தை மாரிமுத்து அம்பலக்காரரிடமிருந்து கிரயம் வாங்கி அவரது அனுபோகத்தில் இருந்து வந்த சொத்து என்பது தெரிய வருகிறது.

viii) இந்நிலையில் பி.சா.ஆ.1 ஆவணப்படி கிரயம் பெற்ற சொத்து பிரதிவாதியின் தந்தையிடமிருந்து பிரதிவாதிக்கு கிடைக்கப்பெற்று இந்நாளது வரை அனுபோகம் செய்து வருகிறார் என்றும், பிரதிவாதியானவர் வாதியின் தந்தைக்கு விற்பனை செய்த சொத்தான சர்வே எண்.201/D5 ன் விஸ்தீரணம் 25 செண்டுக்கும் பி.சா.ஆ.1 ஆவணப்படி உள்ள சர்வே எண்.201/1D விஸ்தீரணம் 44 செண்ட் நிலத்திற்கும் தொடர்பில்லை என்பதால் மேற்கண்ட 2 சொத்துக்களின் சர்வே எண்ணும் ஒன்றுதான் என்பதற்கான விளம்புகை பரிகாரம் கோர முடியாது என பிரதிவாதி தரப்பில் கட்சி செய்யப்பட்டது.

ix) வா.சா.ஆ.1 ஆவணத்தின் கிரயத்தை பொறுத்து பிரதிவாதியானவர் மறுக்கவில்லை. மாறாக, வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சர்வே எண் தவறானதை திருத்தி உத்தரவிட விளம்புகை பரிகாரம் கோர முடியாது என வாதம் செய்யப்பட்டாலும், வா.சா.ஆ.1

ஆவணத்தில் உள்ள சர்வே எண்.201/D5 என்பதும், பி.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சர்வே எண்.201/1D5 என்பதும் வெவ்வேறான சொத்து என்று பிரதிவாதி கட்சி செய்வதால் மேற்கண்ட இரண்டு சொத்துக்களும் வெவ்வேறானது என்பதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு பிரதிவாதியை சார்ந்தது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

x) பிரதிவாதியானவர் வாதியின் தந்தைக்கு விற்பனை செய்ததை ஒப்புக்கொண்டதாலும், மேலும், வாதியின் தந்தை இறந்த பின்னர் வாதியின் குடும்பத்தில் வாதிக்கு ஒதுக்கப்பட்டு அவரது அனுபோகத்தில் இருந்து வருகின்ற சொத்து குறித்து எந்தவித ஆட்சேபணையும் தெரிவிக்காததால் வாதியின் தந்தை பொதியப்பன் கிரயம் பெற்ற தாவா சொத்து குறித்தும் அவரது வாரிசுதாரர்கள் குறித்தும் எந்தவித வினாவும் இந்நீதிமன்றம் எழுப்பவில்லை. அதுபோல, பிரதிவாதியின் தந்தை காளிமுத்து அம்பலக்காரரிடமிருந்து 12.05.1974 ல் கிரயம் பெற்ற சொத்தான சர்வே எண்.201/1D விஸ்தீரணம் 44 செண்ட் சொத்தானது பிரதிவாதியின் தந்தை பாலசுப்பிரமணியம் இறந்த பிறகு அவரது இதர வாரிசுதாரர்கள் சர்வே எண்.201/1D சொத்து குறித்து எந்தவித வினாவும் எதிர் வழக்குரையில் தெரிவிக்கவில்லை என்பதால் பி.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சொத்துக்கள் குறித்தும் பிரதிவாதியின் தந்தை பாலசுப்பிரமணியனின் இதர வாரிசுதாரர்கள் குறித்தும் இந்நீதிமன்றம் எந்தவித வினாவும் எழுப்பவில்லை.

xi) இந்நிலையில் பிரதிவாதி தனது அனுபோகத்திலும், உரிமையிலும் உள்ள சர்வே எண்.201/1D5 சொத்தானது தனது தந்தை பாலசுப்பிரமணியன் கிரயம் பெற்று அதன் மூலம் தனக்கு கிடைக்கப்பெற்ற சொத்து என கட்சி செய்வதால் மேற்கண்ட சொத்து குறித்து பிரதிவாதியை வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது,

**“ எனது தந்தையாருக்கு 1974 ம் வருடம் புல எண். 201/1D சொத்தை தவிர வேறு எந்த பதிவு செய்யப்பட்ட கிரய ஆவணமும் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்".**

**"எனது தந்தையாருக்கு புல எண்.201/1D ஐ தவிர வேறு எந்த சொத்துக்களும் உள்ளதா என்றால் இல்லை. என் தந்தையார் 1974 ம் வருடம் ஏற்படுத்தப்பட்ட கிரய ஆவணத்தில் சொல்லியுள்ள புல எண்ணை குறித்த சொத்துக்களை நான் கொடுத்துவிடுகிறேன், அதில் எனக்கு ஆட்சேபணை இல்லை ”.**

**"என் அப்பா 44 செண்ட் வாங்கியுள்ள அதில் 25 செண்டை வாதியின் தந்தையாருக்கு கிரயம் செய்து கொடுத்துவிட்டார். அவர்களுக்க எனது தந்தையாரால் கிரயம் செய்து கொடுக்கப்பட்ட 25 செண்ட் இடத்தை கொடுப்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை"** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

xii) மேற்கண்ட சாட்சியத்தின்படி தாவா சொத்தின் சர்வே எண்.201/1D சொத்தை தவிர இதர சொத்துக்கள் எதுவும் பிரதிவாதியின் தந்தை கிரயம் வாங்கவில்லை என்பதும், மேற்கண்ட 201/1D சொத்தின் விஸ்தீரணம் 44 செண்டில் 25 செண்டை கிரயம் கொடுத்துவிட்டார் என்பதால் வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சொத்தின் புல எண்ணும், பி.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சொத்தின் புல எண்ணும் வெவ்வேறானது அல்ல என்பது தெரிய வருகிறது. மேலும், பிரதிவாதியானவர் வாதியின் தந்தைக்கு கிரயம் கொடுத்த சர்வே எண்.201/D5 சொத்திற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

“ Nemo Dat Quod Non Habet ” No one can give he/she does not possess. Further no man can transfer better title than he himself has. In another angle, No person can give to another that which he/she was not the true owner .,

xiii) பொதுவாக ஒரு நபர் கிரயம் பெற்ற சொத்தைதான் மற்றொரு நபருக்கு விற்பனை செய்ய முடியும் என்பதால் பிரதிவாதியின் தந்தை கிரயம் பெற்ற சர்வே எண்.201/1D சொத்தை தான் வா.சா.ஆ.1 ஆவணப்படி பிரதிவாதியானவர் வாதியின் தந்தைக்கு விற்பனை செய்திருக்க முடியும் என இந்நீதிமன்றம் கருதுகின்றது.

xiv) மேலும், பிரதிவாதியின் தந்தை 201/1D5 சொத்தை தவிர இதர சொத்துக்கள் ஏதும் கிரயம் பெறவில்லை எனவும், மேற்கண்ட சொத்தில் 25 செண்ட் நிலத்தை விற்பனை செய்துவிட்டார் என பிரதிவாதியானவர் ஒப்புக்கொண்டுள்ளதால் வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சர்வே எண்.201/D5 தவறான உள்ளது என்றும், சர்வே எண்.201/1D5 சரியானது என்று விளம்புகை செய்வதுதான் நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் முடிவு காண்கின்றது.

xv) ஆகவே, வாதி கோருகின்ற விளம்புகை பரிகாரமும், அதன் தொடர்ச்சியான நிரந்தர உறுத்தக்கட்டளை பரிகாரமும் வாதிக்கு கிடைக்கத்தக்கது என எழுவினா-1க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது.

9) <u>எழுவினா -2 க்கான தீர்வு :-</u>

i) வாதி கோருகின்ற வசப்பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா என்பது குறித்து பரிசீலனை செய்கையில், தாவா சொத்தில் 25 செண்டில் 17 செண்டை பிரதிவாதியானவர் ஆக்கிரமித்துள்ளார் என்பதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு வாதியை சார்ந்தது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

ii) வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 ஆவணப்படி வாதியின் தந்தை பிரதிவாதியிடமிருந்து 05.07.2000 ம் தேதியன்று தாவா சொத்தில் 0.25 செண்டை கிரயம் வாங்கினார் என்பதை இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மேற்கண்ட 0.25

செண்ட் நிலத்தில் 17 செண்டை பிரதிவாதியானவர் ஆக்கிரமித்துள்ளார் என வாதி கட்சி செய்வதை நிரூபித்துள்ளாரா என இந்நீதிமன்றம் பரிசீலனை செய்கையில், வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.2 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், தாவா சொத்தில் பிரதிவாதியானவர் 17 செண்ட் நிலத்தை வாதியானவர் வெளியூர் சென்றிருந்த சமயத்தில் 2015 ல் ஆக்கிரமித்ததாக சொல்லி அவற்றை திருப்பி கொடுக்க வேண்டும் என 10.12.2018 ம் தேதியன்று பிரதிவாதிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பினார் என்பது தெரிய வருகிறது. மேற்கண்ட அறிவிப்பை பிரதிவாதி தரப்பில் பி.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்துள்ளார். வாதி அனுப்பிய சட்ட அறிவிப்பினை பிரதிவாதியானவர் பெற்றுக்கொண்டார் என்பது வா.சா.ஆ.3 ன் மூலம் தெரிய வருகிறது.

iii) வாதியின் சட்ட அறிவிப்பை பெற்றுக்கொண்ட பிரதிவாதியானவர் 27.12.2018 ம் தேதியன்று தாவா சொத்தில் 17 செண்ட் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றும், தாவா சொத்தும் பிரதிவாதியின் அனுபோகத்தில் உள்ள சொத்தும் வெவ்வேறானது என வா.சா.ஆ-4 பதில் அறிவிப்பு அனுப்பினார் என்பது தெரிய வருகிறது. மேற்படி பதில் அறிவிப்பினை பிரதிவாதி தரப்பில் பி.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட சட்ட அறிவிப்பு மற்றும் பதில் அறிவிப்பில் தாவா சொத்தில் பிரதிவாதியானவர் 17 செண்ட் ஆக்கிரமித்துள்ளார் என்பது குறித்து வாதி அறிவிப்பு அனுப்பியதை பிரதிவாதி மறுத்துள்ளதால் மேற்கண்ட சொத்தில் பிரதிவாதி ஆக்கிரமித்துள்ளார் என்பதை வாதி தரப்பில் பிரதிவாதி பி.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்தபோது,

" **புல எண்.201/D5 உள்ள 0.25 செண்ட் நிலத்தைப் பொருத்து எனக்கு எவ்வித ஆடசேபணையும் இல்லை. நீதிமன்றத்தின் மூலமாக அவற்றை எடுத்துக்கொள்வதிலும் எனக்கு எவ்விதமான ஆட்சேபணையும் இல்லை. தாவா சொத்தில் அமைந்துள்ள**

**இடத்தை ஆணையர் மற்றும் சர்வேயர் மூலமாக அளப்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். வாதி தாவா சொத்துக்களை யாரிடமிருந்து வாங்கினார் என்றால் என்னுடைய அப்பாவிடமிருந்து வாங்கினார். அந்த ஆவணத்தை பொருத்து எனக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து சம்மந்தமாக எனக்கும் வாதிக்கும் இடையே பிரச்சனை எதுவும் இல்லை. 2015 வருடத்தில் தாவா சொத்தை நான் சட்டவிரோதமாக அபகரித்துவிட்டதாக வாதி சொல்கிறார் என்று சொன்னால் சரிதான்"** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

iv) மேற்கண்ட சங்கதியை உறுதி செய்யும் விதமாக பிரதிவாதி தரப்பு சாட்சியான பி.சா.2 சுந்தரராஜன் என்பவரை வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது,

" **வாதி வாங்கியுள்ள புல எண்.201/D5 லுள்ள 25 செண்ட் சொத்தை பொறுத்து எனக்கு ஆட்சேபணை எதுவும இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் 25 செண்ட் வாதிக்கு சொந்தமானது என்றும், மீதமுள்ள சொத்துக்கள் பிரதிவாதிக்கு சொந்தமானது என்று சொல்கிறேன் என்றால் சரிதான். வாதிக்கு சொந்தமான 0.25 செண்ட் சொத்தில் பிரதிவாதி தலையிடக்கூடாது என்றும், பிரதிவாதிக்கு சொத்தில் வாதி தலையிடக்கூடாது என்றும் சாட்சியமளிக்க வந்துள்ளேன். வாதி சொந்தமான சொத்தில் பிரதிவாதி கட்டி வரும் வீட்டை வாதி இடையூறு செய்யக்கூடாது என்று சொல்லி நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்"** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

v) மேலும், பி.சா.1 மற்றும் பி.சா.2 சாட்சியத்தை ஒத்துரைக்கும் விதமாக சாட்சியம் அளித்த பிரதிவாதி தரப்பு பி.சா.3 அருணகிரி என்பவரை வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது,

**“ புல எண்.201/D5 லுள்ள 0.25 செண்ட் வாதிக்கு சொந்தமானது என்பதில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான். வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள 25 செண்ட் வாதிக்கு சொந்தமானது என்றும், மீதமுள்ள பகுதியை பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்பது குறித்து சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான்"** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

vi) மேற்கண்ட பிரதிவாதியின் சாட்சிகளின் சாட்சியப்படி தாவா சொத்தில் 25 செண்டில் வாதிக்கு சொந்தமானது என்பது தெரிய வருகிறது. மேலும், தாவா சொத்தின் 25 செண்டில் பிரதிவாதியானவர் 17 செண்ட் ஆக்கிரமித்துள்ளார் என்பது தொடர்பாக சட்ட அறிவிப்பு அனுப்பியபோது அதனை மறுத்து பதில் அறிவிப்பு பி.சா.ஆ-4 அனுப்பினார் என்பதும், மேற்கண்ட பதில் அறிவிப்பை வாதி பெற்றுக்கொண்டார் என்பதும் பி.சா.ஆ.5 மூலம் தெரிய வருகிறது.

vii) பிரதிவாதி தரப்பில் தாவா சொத்தில் 17 செண்ட் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என பதில் அறிவிப்பு அனுப்பியும், மேலும், சர்வே எண்.201/1D5 ல் பிரதிவாதியானவர் வீடு கட்டி அதில் மின்னிணைப்பு பெற்று அனுபோகம் செய்து வருகிறார் என்பதை நிரூபிக்கும் விதமாக வீட்டு வரி ரசீதுகள் பி.சா.ஆ-6 மற்றும் மின்னிணைப்பு ரசீதுகள் பி.சா.ஆ.7 குறியீடு செய்து சாட்சியம் அளித்துள்ளார். மாறாக, வாதி தரப்பில் தாவா சொத்து குறித்த 30.07.2016 ம் தேதியிட்ட பட்டா மாறுதல் உத்தரவு கணினி நகல் வா.சா.ஆ-6 ஆக குறியீடு செய்துள்ளார். வா.சா.ஆ.6 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், பிரதிவாதியின் தந்தையின் பெயரிலிருந்து வாதியின் தந்தை பெயருக்கு சர்வே எண்.201/1D5 சொத்தின் பட்டா மாறுதல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.7 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், சர்வே எண்.201/1D5 ல் வாதியின் தந்தை

பொதியப்பன் மற்றும் பிரதிவாதியின் தந்தை பாலசுப்பிரமணியன் ஆகியோர் பெயரில் கூட்டு சிட்டா இருப்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.8 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், சர்வே எண்.201/1D5 ல் வாதியின் தந்தை பொதியப்பன் மற்றும் பிரதிவாதியின் தந்தை பாலசுப்பிரமணியன் ஆகியோர் பெயரில் கிராம அ-பதிவேடு இருப்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.9 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், தாவா சொத்திற்கான புல வரைபடம் என்பதும், வா.சா.ஆ-10 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், வாதியின் தகப்பனார் பொதியப்பனின் இறப்பு சான்றிதழ் என்பதும், வா.சா.ஆ.11 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், பொதியப்பனின் வாரிசு சான்றிதழ் என்பதும் தெரிய வருகிறது.

viii) வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.7 மற்றும் வா.சா.ஆ-8 ஆவணங்களின் அடிப்படையில் தாவா சொத்தில் வாதியின் தந்தை பொதியப்பன் மற்றும் பிரதிவாதியின் தந்தை பாலசுப்பிரமணியன் பெயரில் கூட்டாக இருப்பது தெரிய வருகிறது. மேற்படி தாவா சொத்தான 25 செண்டில் பிரதிவாதியானவர் 17 செண்ட் ஆக்கிரமித்துள்ளார் என சட்ட அறிவிப்பு அனுப்பியும் மேற்கண்ட ஆக்கிரமிப்பை பிரதிவாதி தரப்பில் சாதாரணமாக மறுக்கப்பட்டுள்ளது. இருப்பினும், வா.சா.ஆ.7 மற்றும் வா.சா.ஆ-8 ஆவணங்களின் அடிப்படையில் தாவா சொத்துக்களில் கூட்டாக அனுபோகம் இருப்பதாக பதிவு உள்ளது.

ix) மேலும், பிரதிவாதியானவர் தாவா சொத்தினை குறித்து "புல எண்.201/D5 உள்ள 0.25 செண்ட் நிலத்தைப் பொருத்து எனக்கு எவ்வித ஆடசேபணையும் இல்லை. நீதிமன்றத்தின் மூலமாக அவற்றை எடுத்துக்கொள்வதிலும் எனக்கு எவ்விதமான ஆட்சேபணையும் இல்லை" என சாட்சியமளித்துள்ளதாலும், மேற்கண்ட ஆவணங்களின்படியும், வாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களின் படியும் வாதிக்கு

சொந்தமான பிரதிவாதியின் ஆக்கிரமிப்பிலுள்ள தாவா சொத்து குறித்த வசப்பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கது என எழுவினா-2 க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது.

10) <u>எழுவினா -3 க்கான தீர்வு</u> :-

வாதி கோருகின்ற விளம்புகை பரிகாரம் மற்றும் வசப்பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கது என இந்நீதிமன்றம் தீர்வு காணப்பட்டுள்ளதால் இதர பரிகாரங்கள் ஏதும் இல்லை என்றும், செலவுத்தொகையை அவரவரே ஏற்றுக்கொள்ள வேண்டும் என எழுவினா-3 க்கு தீர்வு காணப்படுகிறது.

**11) முடிவில்,**

1. தாவா அனுமதிக்கப்பட்டு, கீழ்கண்டவாறு தீர்ப்பளிக்கப்படுகிறது.

2. வாதியின் தந்தை கடந்த 05.07.2000 ம் தேதியில் கிரயம் பெற்ற சொத்து சர்வே எண்.201/D5 என்று தவறுதலாக உள்ளதை சர்வே எண்.201/1D5 என்று விளம்புகை செய்தும், அதனை தொடர்ந்து பிரதிவாதிகள் தாவா சொத்தை பொறுத்து எவ்வித வில்லங்கமும் ஏற்படுத்தக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், பிரதிவாதி தாவா சொத்தினை காலி சுவாதீனம் செய்து 60 நாட்களுக்குள் வாதி வசம் ஒப்படைக்க வேண்டும் என தீர்ப்பளிக்கப்படுகிறது.

3. செலவுத்தொகை இல்லை.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30-ம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2026.03.30 17:56:35 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.

**வாதி தரப்பு சாட்சிகள்** :-

| | |
|---|---|
| வா.சா.1 | திரு.ஜெகநாதன் (வாதி), த/பெ. பொதியப்பன். |
| வா.சா.2 | திரு.வடிவேல் (3 ம் நபர்), த/பெ. பொதியப்பன். |

**வாதி தரப்பு சான்றாவணங்கள்** :-

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 05.07.2000 | 05.07.2000 ம் தேதியிட்ட கிரய சாசனம் சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.2 | 10.12.2018 | 10.12.2018 ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அஞ்சலக ரசீது. |
| வா.சா.ஆ.3 | 13.02.2018 | 13.02.2018 ம் தேதியிட்ட பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை. |
| வா.சா.ஆ.4 | 27.12.2018 | 27.12.2018 ம் தேதியிட்ட பிரதிவாதி கொடுத்த பதிலறிவிப்பு அசல். |
| வா.சா.ஆ.5 | -- | தாவா சொத்திற்கான வில்லங்க சான்றிதழ். |
| வா.சா.ஆ.6 | 30.07.2016 | பட்டா மாறுதல் உத்தரவு சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.7 | -- | தாவா சொத்திற்குண்டான சிட்டா கணினி நகல். |
| வா.சா.ஆ.8 | -- | தாவா சொத்திற்குண்டான அ பதிவேடு கணினி நகல். |
| வா.சா.ஆ.9 | -- | தாவா சொத்திற்குண்டான புல வரைபடம் கணினி நகல். |
| வா.சா.ஆ.10 | -- | வாதியின் தகப்பனாரின் இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.11 | -- | வாதியின் தகப்பனாரின் வாரிசு சான்று சான்றிட்ட நகல். |

**பிரதிவாதி தரப்பு சாட்சிகள்** :-

| | |
|---|---|
| பி.சா.1 | திரு.புஷ்பநாதன் (பிரதிவாதி), த/பெ. பாலசுப்ரமணியன். |
| பி.சா.2 | திரு.சுந்தர்ராஜன், த/பெ. நடேசன். |
| பி.சா.3 | திரு.அருணகிரி, த/பெ. வெங்கடாஜலம். |

**<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்</u> :-**

| | | |
|---|---|---|
| பி.சா.ஆ.1 | 12.05.1974 | தாவா சொத்தை பிரதிவாதி அப்பா கிரயம் வாங்கியதற்குண்டான கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல். |
| பி.சா.ஆ.2 | -- | தாவா சொத்திற்குண்டான வில்லங்க சான்றிதழ் அசல். |
| பி.சா.ஆ.3 | 10.12.2018 | வாதி பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அசல். |
| பி.சா.ஆ.4 | 27.12.2018 | பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு. |
| பி.சா.ஆ.5 | -- | வாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்குண்டான அஞ்சலக ஒப்புதல் அட்டை. |
| பி.சா.ஆ.6 | -- | தாவா சொத்திற்குண்டான வீட்டு வரி ரசீதுகள் எண்ணிக்கை - 14. |
| பி.சா.ஆ.7 | 20.09.2005 முதல் 31.01.2023 வரை | தாவா சொத்திற்குண்டான மின் கட்டண ரசீதுகள் |

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2026.03.30 17:56:45 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.